**செய்தி வெளியீடு எண்: 722** **நாள்:25.10.2019**

# <u>செய்தி வெளியீடு</u>

சவூதி அரேபிய நாட்டில் ரியாத்தில் (Riyadh) உள்ள முன்னணி மருத்துவமனைக்கு 35 வயதிற்க்குட்பட்ட டிப்ளோமா/பி.எஸ்,சி படித்த பெண் செவிலியர்கள் பெருமளவில் தேவைப்படுகிறார்கள். இதற்கான நேர்முகத்தேர்வு Suryaa Hotel, New Friends Colony, New Delhi-110025 என்ற முகவரியில் 01.11.2019 மற்றும் 02.11.2019 ஆகிய இரண்டு நாட்கள் காலை 9.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை நடைபெற உள்ளது.

தேர்ந்தெடுக்கப்படுபவர்களுக்கு மாத ஊதியம் ரூ.70,000/- முதல் ரூ.90,000/- வரை, இலவச விமான டிக்கெட், இருப்பிடம், விசா, மருத்துவச்சலுகை மற்றும் சவூதி அரேபிய நாட்டின் சட்டத்திட்டத்திற்க்குட்பட்ட இதர சலுகைகள் வழங்கப்படும்.

எனவே, விருப்பமுள்ளவர்கள் அயல் நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனத்தின் மின்னஞ்சல் ovemclsn@gmail.com என்ற முகவரிக்கு தங்களின் சுய விவரங்கள் அடங்கிய விண்ணப்பத்துடன் கல்வி மற்றும் அனுபவச்சான்றிதழ், பாஸ்போர்ட் ஆகியவற்றின் நகல்கள் மற்றும் வெள்ளைநிறப் பின்னணியில் எடுக்கப்பட்ட புகைப்படத்துடன் 29.10.2019க்குள் அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

ஊதியம் மற்றும் பணி விவரங்களை அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவன வலைதளமான www.omcmanpower.com மற்றும் 044-22505886 / 22500417 / 8220634389 என்ற தொலைபேசி எண்களின் மூலமாகவும் அறிந்து கொள்ளலாம்.

இந்திய அரசின் வெளிநாடுவாழ் இந்தியர்களுக்கான விவகார அமைச்சகத்தால் வழங்கப்பட்ட அயல்நாட்டு நிறுவனத்தின் முகவர் எண். Rc.No.B-0821/CHENNAI/CORP/1000+/5/308/84 ஆகும்,

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**